
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1182

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

112

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## அல்லாதார் என்ற பட்டம் நமக்குக் கூடாது!

இராமநாதபுரம் மாவட்ட முதலாவது திராவிட மாணவர் மாநாடு, விருதுநகரில் மாதர் சங்க கட்டடத்தில் 11.06.1944 அன்று நடைபெற்றது. காலை 10.30 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலுடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கல்லூரி மாணவர்களும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும், மாணவிகளும் வருகைதந்திருந்தனர். அன்றைக்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவராக இருந்த கே.ஏ.மதியழகன், நீதிக் கட்சியின் ‘தராசு கொடி’யை ஏற்றிவைத்தார்.

ஏ.வி.பி.ஆசைத்தம்பி, அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாணவர்களின் பலத்த கைதட்டலுக்கு இடையே மாநாட்டைத் திறந்துவைத்து, நீண்டதொரு சொற்பொழிவு ஆற்றினார் பெரியார். தலைமை உரையாற்றிய அன்றைய விருதுநகர் நகர்மன்றத் தலைவர் வே.வ.ராமசாமி, "திருவாரூர் மாநாட்டில் தீர்மானித்தபடி நானும் என் உறவினரும் மக்கள்தொகைக் கணக்கு எடுக்கப்பட்ட பொழுது, எங்களைத் ‘திராவிடர்’ என்றே கூறிக்கொண்டோம். பெரியார் தன்னலமற்று மக்கட்பணி புரிந்து வருவதன் பயனாக, நம்மை நாம் திராவிடரென்று அறிந்துள்ளோம். இந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாது, இளைஞர்கள் உண்மையான ஊக்கத்துடன் நம் மக்கள் விடுதலைக்கு உழைக்க வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

அதன் பின்னர், தி.பொ.வேதாசலம் திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைத்தார். பெரியார் படத்தை பேராசிரியர் க.அன்பழகனும், சர் ஏ.டி.பன்னீர்செல்வம் படத்தை அறிஞர் அண்ணாவும் திறந்து




ஓவியம் : சிகரன்

வைத்தனர். பின்னர், ‘தமிழ் இளைஞரும் தமிழ்நாடும்’ என்ற தலைப்பில் மு.ராமலிங்கம், ‘திராவிட நாட்டுப் பிரிவினையில் மாணவர்கள்’ என்ற தலைப்பில் பு.ஜனார்த்தனன், ‘எதிர்காலத் திட்டம்’ என்ற தலைப்பில் அ.பொன்னம்பலம் ஆகியோர் உரையாற்றினர்.

திராவிட நாட்டுப் பிரிவினைக்கான ஆக்க வேலைகளுக்கு, ஒரு கோடி ரூபாய் திரட்டுவதற்கான முயற்சிகளை நீதிக்கட்சியின் வரும் மாகாண மாநாட்டில் எடுத்துக்கொள்ள வேண்டும், உணவு விடுதிகளில் சாதி பேதத்தைக் குறிக்கும் சொற்களை நீக்க, திராவிட நாட்டு நகராண்மைக் கழகத் தலைவர்கள் முயற்சி எடுக்க வேண்டும், எல்லா ஊர்களிலும் திராவிடர் தொண்டர் படை ஏற்படுத்த வேண்டும், திராவிட நடிகர் கழகங்கள் நாடெங்கும் தோன்ற வேண்டும், இணைக்கப்பட்ட தென்னாட்டு இருபெரும் இருப்புப்பாதைகளுக்கு, ‘தி கிரேட் டிரவிடியன் ரயில்வே’ என்ற பெயரை அரசாங்கத்தார் இடவேண்டும், பாடப்புத்தகங்கள் திருத்தி எழுதப்பட வேண்டும்’ என மிக முக்கியத் தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இறுதியாகப் பேசிய பெரியார், “நம் நிலை ஆப்பிரிக்கா நாட்டு சுதேசிகள் நிலையில் இருக்கிறது. இதை மாற்றுவதற்காகவே இப்படிப்பட்ட மாநாடுகளைக் கூட்டி, மக்களுக்கு உணர்ச்சியூட்டித் தொண் டாற்றச் செய்கிறோம். இப்பொழுது திராவிடர் என்ற மாறுதல் ஏன்? இது பலரும் கேட்கக்கூடிய நியாயமான கேள்வியாகும். தென் இந்தியப் பெருங்குடி மக்களுக்கு இலட்சியச் சொல் ஒன்றில்லாமலிருப்பது பெருங்கேடு. இந்தக் காரணத்தாலேயும், ‘அல்லாதார்’ என்ற பட்டம் நமக்குக் கூடாது என்பதாலேயும், நாமெல் லோரும் ஒரு கூட்டிற்குள் வர வேண்டுமென்பதாலேயும் ஒரு குறிச்சொல் தேவை; மிக மிகத் தேவை” என்றார்.

இந்த, திராவிட மாணவர் மாநாட்டையொட்டி, செல்வம் திடலில் இரவு 9.45 மணிக்கு திராவிடர் பொதுக்கூட்டம் ‘திராவிட நாடு’ ஆசிரியர் அண்ணா தலைமையில் நடைபெற்றது. அங்கு கூடியிருந்த சுமார் ஐந்தாயிரம் பேருக்கு மத்தியில் அண்ணாவும் பெரியாரும் நீண்ட சொற்பொழிவாற்றினர். நள்ளிரவு 12.30 மணிக்கு பொதுக் கூட்டம் முடிவுற்றது.

**...கூட்டம் திரளும்**

## அமெரிக்க டிரம்ப்பின் நரகமும் நரேந்திரரின் மௌனமும்

அமெரிக்கா, பொருளாதார வீழ்ச்சியில் சிக்கித் திணறிப் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கையைச் சிதறடித்துவருகிறது. அமெரிக்க மக்கள் என்றும் இல்லாத அளவிற்கு டிரம்ப்பிற்கு எதிராக அணி திரண்டு எல்லாத் தலைநகரங்களிலும் போருக்கு எதிராகப் போராட்டங்களை நடத்திவருகின்றனர். இதை மறைப்பதற்காக, திசை திருப்புவதற்காகவே டிரம்ப் நாடகமாடி வருகிறார் என சமூக வலைதளம் மூலம் விமர்சனம் செய்துள்ளார், பேராசிரியர் மு.நாகநாதன்.

“உலகின் நாகரிகத் தொட்டில்களான இந்தியா, சீனா, ஈரான் மீது டிரம்ப், நரகல் நாக்கினால் தரமிழந்து தாக்கியுள்ளார். இந்தியா, சீனா நாடுகளை ‘நரகத்தின் குழிகள்’ என்று சாடியுள்ளார்.

ஏற்கெனவே, இந்தியா - பாகிஸ்தான் போரைத் தடுத்து நிறுத்தினேன் என்று பல முறை கூறிவிட்டார். இந்தியா பெட்ரோலியப் பொருள்களை யாரிடம் வாங்க வேண்டும், எப்போது வாங்க வேண்டும் என்று அடிக்கடி ஆணைகளைப் பிறப்பிக்கிறார்.

இந்தியாவை யார் ஆட்சி செய்கிறார்கள் என்ற ஐயம் எழுகிற அளவிற்கு டிரம்ப்பின் கருத்துகள் தொடர்ந்து அமைந்துவருகின்றன. இதுவரை டிரம்ப் கூறிய கருத்துகளைவிட இந்தியாவை நரகக்குழி என்று குறிப்பிட்டது - ஒரு நாட்டின் மீதும் மக்கள் மீதும், அரசாட்சி உரிமையின் மீதும் நடத்திய பெரும் தாக்குதலாகும்.

இதற்கும் இன்று வரை நரேந்திர மோடியோ அவரது அமைச்சரவையோ கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கவில்லை. இத்தகைய தரம் தாழ்ந்த டிரம்ப்பின் விமர்சனத்திற்கு எதிராக, இந்தியாவின் சார்பாக யார் பதிலளித்துள்ளார்கள் என்பதைக் காணும்போது, ஒரு பெரும் அதிர்ச்சியை நமக்குத் தருகிறது.

ஏனென்றால், பெயர் குறிப்பிடப்படாமல் இந்திய வெளியுறவுத் துறையின் சார்பாக வெளியிடப்பட்ட மறுப்பு அறிக்கையில், ‘விவரமில்லாத, பொருத்தமற்ற, நாகரிகமற்ற (uninformed, inappropriate and in poor taste) கருத்து’ எனப் பட்டும்படாமல் மயிலிறகைக் கொண்டு அமெரிக்காவைத் தடவுவது போன்றுதான் உள்ளது; தாக்குவது போல் இல்லை.

டிரம்ப்பைக் கண்டு நரேந்திரர் தொடர்ந்து அஞ்சுவதும் கெஞ்சுவதும், அடங்கிப்போவதும் ஏன்? ஏன்? ஏன்?

என்று தணியும் இந்தியாவின் இந்த அச்சம்? என்று உயரும் இந்தியாவின் தன்மானம்?” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


112

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## புத்தகப் புரட்சி!

தாழ்ந்துகிடந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தனது செயல்பாடுகளால் தன்மானம் மிக்க சமூகமாக உருமாற்ற உழைத்தவர் தந்தை பெரியார். அவரது பிரதான அரசியல் செயல்பாடுகளாகச் சொற்பொழிவும், போராட்டங்களும், செய்தித்தாள் நடத்துவதுமாக இருந்தாலும், தன்னுடைய கருத்துகள் பல தரப்பு மக்களையும் சென்றுசேர, பதிப்புத் துறையிலும் மிகத் தீவிரமாக இயங்கியவர் அவர்.

குடிஅரசு பதிப்பகம், பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், விடுதலை வெளியீடு, பகுத்தறிவு வெளியீடு, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் எனப் பல்வேறு காலகட்டங்களில் தந்தை பெரியார் நடத்திய பதிப்பகங்கள் மூலம் வெளியான முக்கியமான நூல்கள் குறித்து நமக்குத் தெரிவிக்கும் நூல், ‘தந்தை பெரியாரின் புத்தகப் புரட்சி’. திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் இந்நூலை எழுதி இருக்கிறார். திராவிடர் கழக வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.




8 சதவிகித மக்கள் எழுதப் படிக்கத் தெரிந்த ஒரு சமூகத்தில், பெரும் பொருட்செலவில் மிகத் தீவிர பகுத்தறிவு, சுயமரியாதை, சாதி ஒழிப்புக் கருத்துகளை உள்ளடக்கிய புத்தகங்களைப் பதிப்பிக்க வேண்டும் என்ற சிந்தனை, தொலைநோக்காளரான பெரியாருக்கு ஏற்பட்டதில் வியப்பில்லை. பதிப்புத் துறையிலும் நிபுணராகத் திகழ்ந்தார் பெரியார் என்பதை இந்நூலின் தொடக்க அத்தியாயத்தில் கவனப்படுத்துகிறார் ஆசிரியர். லாப நோக்கம் எதுவும் இன்றி, நூல்களைக் குறித்த விலையில் நன்கொடை பெற்று வெளியிட்டவர் பெரியார். புகைப்படம் எடுக்கவும், சுக துக்க நிகழ்வுகளில் பங்கெடுக்கவும் நிதி பெற்ற பெரியார், நூல்களை வாங்கித் தன்னிடம் கையொப்பம் பெறுபவர்களிடம் கட்டணம் எதுவும் வாங்காமல் இருந்ததே வாசகர்கள்மீது அவர் கொண்ட மதிப்பிற்குச் சான்று.

> **உலக மக்கள் புத்தாக்கம் பெற, பதிப்பகங்கள் நடத்திப் புத்தகங்களை வெளியிட்ட தந்தை பெரியாரின் பணிகளை அறிந்துகொள்ள இன்றியமையாத நூல்**

இந்நூலில், பல்வேறு பதிப்பகங்களின் வாயிலாகப் பெரியார் வெளியிட்ட தரமான நூல்கள் குறித்த வரலாறும் அறிமுகக் குறிப்பும் இடம் பெற்றுள்ளது. குறிப்பாக, குடிஅரசு பதிப்பகம் மூலம் ‘அகத்தியர் ஆராய்ச்சி’, சிவானந்த சரஸ்வதி எழுதிய ‘ஞானசூரியன்’, காத்ரீன் மேயோவின் ‘MOTHER INDIA’ நூலை மதிப்பிடும் ‘மேயோ கூற்று மெய்யா? பொய்யா?’ முதலிய நூல்களையும் அவை வெளியான பின்னணியையும் மிகவும் சுவாரசியமான நடையில் பதிவுசெய்துள்ளது இந்நூல்.

முன்னோடி பதிப்பகமாகப் பொதுவுடைமை நூல்களைப் பதிப்பித்தது, அம்பேத்கரின் புத்தகங்களை முதலில் வெளியிட்டது, பெண்ணியம் சார்ந்த நூல்களைப் பதிப்பித்தது, அறிவுலக மாமேதை இங்கர்சால் நூல்களை மொழியாக்கம் செய்து வெளியிட்டது, பகுத்தறிவு மற்றும் கடவுள் மறுப்பு நூல்களைத் தமிழ்ச்சூழலில் அறிமுகப்படுத்தியது, உலக சிந்தனையாளர் களைத் தமிழ்நாட்டு மக்களுக்கு அறிமுகப் படுத்தியது, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் நூல்கள் பதிப்பு, சமூகத்தில் நிலவும் மூட வழக்கங்களை அம்பலப்படுத்தி மக்களுக்கு ஒளியூட்டும் நூல்கள் என தந்தை பெரியாரின் 95 ஆண்டுக்கால பதிப்புத் தொண்டும் அதன் சாதனைகளும் இந்நூல் முழுவதும் நிரம்பி உள்ளன.

பல அரிய நூல்களின் அட்டைப்படங்களும், பெரியார் நடத்திய இதழ்களின் முகப்புப் பக்கங்களும் இதில் இடப்பெற்றுள்ளது தனிச் சிறப்பு. உலக மக்கள் புத்தாக்கம் பெற, பதிப்பகங்கள் நடத்திப் புத்தகங்களை வெளியிட்ட தந்தை பெரியாரின் பணிகளை அறிந்துகொள்ள இன்றியமையாத நூல்.

**...வாசிப்போம்.**

# ஃப்ளாஷ்பேக்





பன்னீர்செல்வம்

## கோபாலபுரத்தில் சந்தித்த தளபதி

2018-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மறைவுக்குப் பின்னர், கழகத் தலைவராகத் தளபதி அவர்கள் பொறுப்பேற்று, கோபாலபுரம் இல்லத்தில் தொண்டர்களைச் சந்தித்தார். அப்போது, நானும் என் மகனும் தலைவரைச் சந்தித்து மகிழ்ந்தோம்.

**- சூளை.பன்னீர்செல்வம்**
**எழும்பூர் வடக்குப் பகுதி, சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# கருவூலம்

## நான்கு வாரங்கள் சிறைத் தண்டனை!

1957-ஆம் ஆண்டு, குத்தூசி குருசாமி உள்பட சென்னை மாவட்ட திராவிடர் கழகத்தினர் சென்னை பாரிமுனையில் மறியல் போராட்டத்துக்கு உண்டியல் மூலம் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களைக் கைதுசெய்த காவல் துறை, அவமானப் படுத்தும் நோக்கத்தில், ‘பிச்சை எடுத்தார்கள்’ என வழக்குப் போட்டு நான்கு வாரங்கள் சிறைத் தண்டனையும் பெற்றுக் கொடுத்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900